விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 223 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 14 புதன்கிழமை (30.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




குழு இசை முடிவுக்கு எதிராக

## மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல்

### தீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு இரண்டிற்கான குழு இசைப் போட்டி

15ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப் புதைகுழியில்

## 7 மனித எச்சங்கள் நேற்று அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் 7 மனித எச்சங்கள் நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்

15ஆம் பக்கம் பார்க்க

எதிர்வரும் திங்கள் முதல்

# ‘ஸ்கான்’ மூலம் செம்மணியில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் “ஸ்கான்” மூலம் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம் ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் கட்டுடையில் வாள்வெட்டு : ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுடைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் மோட்டார்

15ஆம் பக்கம் பார்க்க

உலகின் மிகச் சிறந்த

## தீவுகள் பட்டியலில் இலங்கை முதலிடம்

(கொழும்பு)

உலகளாவிய பயணத் தளமான பிக் 7 டிராவல் தொகுத்த “உலகின் 50 சிறந்த தீவுகள்” பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்து, உலகின் மிக அழகான தீவாக முடிசூட்டப்பட்டுள்ளது.

பிக் 7 டிராவல் இன் படி,

15ஆம் பக்கம் பார்க்க

## நாமலுக்கு பிணை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை நீதிமன்றால் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு பிணை வழங்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## நல்லிணக்கம் காணும் எண்ணம் எந்த அரசிடமும் இல்லை

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இனங்களிடையே நல்லிணக்கம் காணும் எண்ணம் எந்த அரசிடமும் இல்லை எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாரில் விபரீத முடிவெடுத்த பெண் மரணம்

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு பகுதியில் விபரீத முடிவெடுத்த பெண்ணொருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட்ட சுவிஸ் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியை இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் தலைமையிலான குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர்.

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள சுவிற்சர்லாந்து தூதுக் குழுவினர் நேற்று வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து கலந்துரையாடியதோடு செம்மணி அகழ்வுப் பணியையும் பார்வையிட்டனர்.

அத்தோடு செம்மணி அகழ்வில் ஈடுபட்ட துறைசார் நிபுணர்களுடன் புதைகுழி அகழ்

15ஆம் பக்கம் பார்க்க

நல்லூர் ஆலய வளாகத்துக்குள்

## அத்துமீறி உள் நுழைந்த இராணுவ வாகனத்தால் பரபரப்பு

(யர்ப்பாணம்)

நல்லூர் ஆலய வீதித் தடைகளை மீறி ஆலய வளாகத்தினுள் இராணுவத்தினரின் கப் ரக வாகனம் அத்துமீறி நுழைந்தமையால் ஆலய வீதியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர் ஆலய வருடாந்த


16ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் வண்.கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹமாரியம்மன் தேவஸ்தான விசுவாவசு வருட மகோற்சவத்தில் நேற்று அம்பிகையின் கிராம பிரதட்சண உற்சவம் இடம்பெற்றது.

இதன்போது அம்பிகை அழகிய முத்துச் சப்பறந்தனில் ஆரோகணித்து மானாட்டம், மயிலாட்டம் உள்ளிட்ட தமிழர் பாரம்பரியக் கலைகள் சகிதம் கிராம வலம் வந்து பக்தர்களுக்கு இன்னருள் பாலித்தார். (ம-7)

# யாழ்.மணியம் தோட்டத்தில் நேற்று சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் மணியம் தோட்டத்தில் நேற்று சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் மணியம் தோட்டம் முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த வைரமுத்து சாந்தலிங்கம் (வயது-54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் தனது 56 வயதுடைய சகோதரியுடன் வீட்டில் வசித்து வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

# கோப்பாயில் கோர விபத்து



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் கோப்பாய் பகுதியில் நேற்று கோர விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதி வழியாகப் பயணிகளுடன் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் அவ்வழியே வந்த சிறிய ரக கார் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

விபத்திற்குள்ளான பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்ததில் குறித்த வீதியிலிருந்த வர்த்தகக் கடையொன்றுக்குள் புகுந்துள்ளது.

தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏதும் ஏற்படாதபோதும் விபத்தில் பேருந்து சாரதிக்கும் சில பயணிகளுக்கும், கார் சாரதிக்கும் காயங்கள் ஏற்பட்டதுடன் இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

விபத்தையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்ததோடு விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,104)

# கண்டி யடிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மனைவி, மகள் சடலங்களாக மீட்பு

கண்டி யடிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர், அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் அவர்களது வீட்டில் சடலங்களாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யடிநுவர, யஹலதென்ன பகுதியில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் வீட்டில் இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் யடிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் (வயது-52), அவரது மனைவி (வயது-44) மற்றும் அவர்களது மகள் (வயது-17) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யடிநுவர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையிலும் அவரது மனைவி மற்றும் மகளின் சடலங்கள் வீட்டின் அறைகளில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடன் பிரச்சினை காரணமாக மேற்படி மூவர் தற்கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 - 12 - 1952



மறைவு
27 - 07 - 2025

## கணபதிப்பிள்ளை கதிராசி

கப்புதுவைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கணபதிப்பிள்ளை கதிராசி அவர்கள் கடந்த (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் சாம்பசிவம், தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவராசா பரமேஸ்வரி அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, செல்லையா, பார்வதி, சுப்ரமணியம், சகுந்தலாதேவி மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கீதா (லண்டன்), ஹரிகரன் (உரிமையாளர் - ஹரிஷ் உணவகம், நெல்லியடி), கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரந்தாமன் (லண்டன்), நிரஞ்சனா ஆகியோரின் பாசமிகு மாமியும் சுவாஹதா (லண்டன்), காவ்யன் (லண்டன்), ரித்விகா ஆகியோரின் அன்பு நிறைந்த பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கணேஸ் அறிவாலய வீதி,
கரவெட்டி வடக்கு,
நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 757 4752

(1376)

# லொறி மோதி ஒருவர் பலி

குருநாகல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யன்தம்பலாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி ஒன்று வீதியில் பயணித்த நபரொருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# இலங்கையின் கல்வி முறை பற்றி பிரதமர் ஹரிணிக்கு என்ன தெரியும்

## திலித் ஜயவீர எம்.பி கேள்வி

இலங்கையின் கல்வி முறைபற்றி பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவுக்கு என்ன தெரியும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்வி முறை மாற்றம் தொடர்பில் ஆசிரியர் சங்கத்திடம் கதைக்கவில்லை, அதிபர் சங்கங்களிடம் கதைக்கவில்லை.


சாதாரண நிகழ்நிலை கலந்துரையாடலுடன் இந்தத் திட்டங்கள் ஹரிணியால் முன்னெடுக்கப்படுகின்றன. ஏதோ காலத்தில் பாட நேரம் 30 நிமிடங்கள் மட்டுமே.


தற்போது 40 நிமிடங்கள் பாடவேளைகள் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் எதிர்வரும் காலங்களில் அவை 50 நிமிடங்களாக மாற்றப்படவுள்ளன. யாரிடமாவது கேட்டார்களா? இது ஐ.எம்.எப்பிடம் கேட்டு எடுக்கப்பட்ட முடிவு.


தற்போது பாடசாலைகளில் இருக்கும் கதிரைகள் பற்றித் தெரியுமல்லவா. அனைத்தும் பலகைக் கதிரைகள். சில வேலைகளில் பாடவேளைகள் பாடசாலைக்கு வெளியே இடம்பெறுகிறன.

வியர்வையுடன் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவ்வாறான பின்னணியில் யாரிடமும் கேட்காமல் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்ன? எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நேற்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. காலை 08.15 மணிக்கு வசந்தமண்டப பூஜை யுடன் ஆரம்பமாகிய உற்சவம் தொடர்ந்து கொடியேற்றத்துடன் பிள்ளையார், முருகப் பெருமான், வள்ளி தெய்வானை மூஷிகம், மயில், அன்னம் என மூன்று தங்க வாகனங்க ளில் உள்வீதி உலா வந்தனர்.

(படங்கள்- சிவசாந்தன்)

# முதியோருக்கான கொடுப்பனவு இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

(கொழும்பு)

முதியோருக்கான ஜூலை மாதத் துக்கான நிவாரணக் கொடுப்பனவு கள், இன்று முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக் கப்படுமென நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

ஆறு லட்சத்து 768 பயனாளிக ளுக்காக ரூ. 3004 மில்லியன் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதுடன், குறித்த நிவாரணத் தொகை பயனா ளிகளின் அஸ்வெசும வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதியோர் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள்



ஜூலை 30 ஆம் திகதி முதல் அவர்களின் அஸ்வெசும வங்கிக் கணக்குகளிலிருந்து தங்களின் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (நி-6)

உ
குருவே துணை
ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 40ஆம் ஆண்டு குருபூசை

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறு
காலம் : 31.07.2025 வியாழக்கிழமை
காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சிறப்புரை – 'குருவாய் வருவாய்'
(ஆசிரியர் திரு. துரை. கணேசமூர்த்தி) இடம்பெறவுள்ளது.
சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து குருவருளும் திருவருளும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
சுபம். சாந்தி.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு. (C-3524) சந்நிதியான் ஆச்சிரமம்.

# வீதி விபத்துக்களால் ஏழு மாதத்தில் 1355 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு இதுவரை 1,355 பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ள தாக, இலங்கை பொலி ஸார் தெரிவித்துள்ள னர்.

2024 ஆம் ஆண் டில், நாடு முழு வதும் வீதிவிபத்துகளால் மொத் தம் 2,521 உயிரிழப்பு கள் பதிவாகியுள்ள தாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் பிரடெரிக் வூட்லர் குறிப்பிட்டார்.

தினமும் நிகழும் உயிரிழப்புகளைக் குறை ப்பதில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

குடிபோதையில் வாகனம் ஓட்டு பவர்கள் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகள் மீது, சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(1379)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 839 1308

சேவை நலன் பாராட்டு
திருமதி
சித்திரா கிரிதரன்

சேவை விபரம்
- கலைப்பட்டதாரி (சிறப்பு)
- யா/ மகாஜனக் கல்லூரி (01.02.1999 - 13.02.2010)
- யா/ இராமநாதன் கல்லூரி (15.02.2010 - 24.02.2021)
- யா/ இணுவில் மத்திய கல்லூரி (24.02.2021 - 30.07.2025)

ஆசிரிய பணியில் இன்றுடன் இருபத்தாறு ஆண்டுகள் அரசியல் விஞ்ஞான பாட ஆசிரியராக சேவையாற்றி இளைப்பாறும் உங்கள் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர் கல்வி சாரா - ஊழியர் நலன்புரிச்சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.
(4925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகள் அணி படுதோல்வி; தொடரை முழுமையாக கைப்பற்றிய அவுஸ்ரேலியா

**அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடந்த டெஸ்ட் தொடரை 3-0 என்ற நிலையிலும் அடுத்ததாக நடந்த 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 5-0 என்ற நிலையிலும் அவுஸ்திரேலிய அணி முழுமையாக கைப்பற்றி மேற்கிந்திய தீவுகள் அணியை அதன் சொந்த மண்ணிலே படுதோல்வி அடையச் செய்துள்ளது.**




அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கோண்டு 5 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் ஆடி வருகிறது.

இதில் முதல் 4 போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 4-0 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆவது ரி-20 போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.4 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மேற்கிந்திய திவுகள் தரப்பில் அதிகபட்சமாக ஹெட்மையர் 52 ரன் எடுத்தார்.

அவுஸ்திரேலியா தரப்பில் பென் துவார்ஷியஸ் 3 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 171 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த அவுஸ்திரேலியா 17 ஓவரில் 7 விக்கெட்டை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 5-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றியது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக மிட் செல் ஓவன் 37 ஓட்டங்கள் எடுத்தார்.(3)

### ஐரோப்பிய பெண்கள் கால்பந்து

# ஸ்பெயினை வீழ்த்தி சம்பியனானது இங்கிலாந்து




14 ஆவது ஐரோப்பிய பெண்கள் கால்பந்து சம்பியன்ஷிப் போட்டி சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த இறுதி ஆட்டத்தில் உலக சம்பியனான ஸ்பெயின் ஐரோப்பிய சாம்பியனான இங்கிலாந்து ஆகிய இரு அணிகளும் மோதின.


ஆட்டத்தின் 25 ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் கோல் அடித்தது. மரியோனா கால்டென்டி இந்த கோலை அடித்தார். முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் ஸ்பெயின் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. தொடர்ந்து 57 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து பதில் கோல் அடித்து சமன் செய்தது. அலெசியா ருஸ்சோ இந்தக் கோலை பதிவு செய்தார்.

ஆட்டம் முடியும் நேரமான 90 நிமிடங்கள் வரை இரு அணிகளும் மேலும் கோல் எதுவும் அடிக்கவில்லை. 1-1 என்ற சமநிலை ஏற்பட்டது. இதனால் கூடுதல் நேரமான 30 நிமிடம் கடைபிடிக்கப்பட்டது. கூடுதல் நேரத்திலும் மேலும் கோல் எதுவும் விழவில்லை. இதனால் சம்பியன் யார் என்பதை நிர்ணயம் செய்வதற்காக பெனால்டி ஷூட் அவுட் கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் இங்கிலாந்து 3-1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி ஐரோப்பிய கோப்பையை வென்றது. இந்த வெற்றியால் அந்த அணி 2023 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பதிலடி கொடுத்தது.

இந் நிலையில் இங்கிலாந்து தொடர்ந்து 2 ஆவது முறையாக ஐரோப்பியன் சம்பியன் பட்டத்தை வென்று சாதித்தது. கடந்த 2022 ஆம் ஆண்டு ஜேர்மனியை தோற்கடித்து கோப்பையை வென்று இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (3)

# ஹொங்கொங் அணி பயிற்றுவிப்பாளரானார்; இலங்கை வீரர் கௌஷால் சில்வா



ஹொங்கொங் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான கௌஷால் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். கௌஷல் சில்வா ஒரு சர்வதேச கிரிக்கெட் அணிக்கு பயிற்றுவிப்பாளராகச் செயற்படுவது இதுவே முதல் முறையாகும்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக 39 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 2,099 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இதில் 3 சதங்களும் 12 அரை சதங்களும் உள்ளடங்கும்.

இந்தநிலையில் "ஹொங்கொங் அணியைப் பயிற்றுவிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியளிப்பதாகவும், அவர்களுடன் பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகவும்" கௌஷால் சில்வா தெரிவித்துள்ளார். (3)



இந்தியாவின் மங்களா கர்நாடகா தெற்கு மாஸ்ரேஸ் அசோசியேசன் சம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கையிலிருந்து ரி.வேலாயுதப்பிள்ளை 75 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி 300 மீற்றர் தடைகளப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் மற்றும் 1000 மீற்றர் ஓட்டப்போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு

01 . 03 . 1955



உதிர்வு

10 . 08 . 2024

அமரர்

## தம்பிப்பிள்ளை வரதராஜா (B.Ed)

( அதிபர் – The Express Institute )

தாயாகி எமக்கு பாசம் தந்து அணைத்தவரே !
தந்தைக்கு நிகராய் எம்மில் நேசம் பொழிந்தவரே !
இன்பம் நிறை வாழ்வை எம் நெஞ்சில் ஈந்தவரே !
ஈரம் சிந்தும் எம் விழிகள் உம்மைத் தேடுகின்றனவே !

உன்னதம் கல்வி என்று எமக்குரைத்தவரே
ஊதியம் கொண்டேகி உயர்ந்திட வைத்தவரே
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் திருவாய் மலர்ந்தீரே
எம்மைப் பிரிந்திட ஏனிந்த அவசரம் கொண்டீரோ?

ஏங்கிப் பதறி நெஞ்சுருகும் எமக்கு ஆறுதல் தாரீரோ ?
ஐயம் தீர்க்க வழியாகிய அஞ்சாத நெஞ்சத்தவரே
ஓராண்டும் மறைந்தது ஓர் ஆலயமாய் உறைந்தீரே
ஒரு முறை உங்கள் தரிசனம் காணத் தவிக்கின்றோமே !


ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி......

(1381)

30.07.2025

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட்டுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் திருமுறையிசையின் பாட்டு-ச.நித்தியானந்தன், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்- மு.சுலக்சன், கெஞ்சிரா-செல்வன்.நி.மோகனதர்சன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-பி.சண்முகராஜா, வயலின்-செல்வி.கிருஷ்ணி சண்முகராஜா, மிருதங்கம்-வ.நமணசர்மா, கெஞ்சிரா-செல்வன்.ற.லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இரதோற்சவமும், 9 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெற்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இரதோற்சவமும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெற்று மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 250 | 250 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 400 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 250 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 280 |
| கோவா | 300 | 350 | 400 | 250 | 350 |
| கரட் | 350 | 400 | 450 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-300 | 350 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 300 | 400 | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 280 | 350 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 300 | 180 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 160 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 550 | 500 | 350 | 500 |
| போஞ்சி | 400 | 750 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 250 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 70-120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-160 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 500 | 250 | 450 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 120 | 160 |




## கா! நல்லைக் குமரேசனே!

அகரமெனச் சிகரமென வாதியந்த மற்றதொரு
அளவிடங் காதபொருளே!
பகரவொரு வுவமையிலைப் பார்க்குமிடம் நீக்கமற
படர்ந்தொளிரும் பரமகுருவே!
நிகரெனவே யெதுவுமிலை நின்னருளைப் பாடுதற்கு
நிறைமதியைத் தந்துவருள்வாய்
திகழுமணி யற்புதனே தெவிட்டாத பொற்பதனே
திருநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## மாசற்ற சோதியே எம் நல்லூர் மயுரேசா

அருணகிரிக்கு அருள்புரிந்த அற்புதனே சரணம்
ஔவைக்கு பழம் கொடுத்த பரம்பொருளே சரணம்
அல்லற்படும் அடியவரின் ஆருயிரே சரணம்
இல்லையென்று வருவோரின் வள்ளலே சரணம்
சஞ்சலங்கள் தீர்த்து வைக்கும் சரவணபவா சரணம்
நல்லூரின் நாயகனே வேலவனே சரணம்
மாசற்ற சோதியே எம் நல்லூர் மயுரேசா சரணம்

திருமதி.சரவணபவன் செல்வரதி,
பிளவத்தை.

## நல்லருள் தாராயோ!

நல்லையம் பதியிலே நாடிவரும் பக்தருக்கு
நல் அருள் சுரந்தருள்வாய்-நல்லாயோ!
உன்னை வேண்டிடும் மெய்யடியார் குறை தீரும்
வண்ணம்
உதவி செய், எம்மை அஞ்சலிக்க வேண்டாம்!

நல்லையம்பதி நாடும் நல்லடியவர்கட்கே
நற்குணம் புனைந்தருள்வாய்-நாதனே!
உன்னையே தஞ்சமெனத் துதிப்பவர்கள் ஏத்த
உண்மைத் தயையால் ஈந்தருள்வாய்-குமரா!

நல்லருள் தாராயோ! நல்லைக்குமரா!
நான் என்றும் உன்னடியேன்-நாயகனே!
உன்னடியே சரணம் என்போம் உறுதியாக
உலகளந்த தனிக்கோவா, அருள்தருவாய்!

பா.இராகுலன்,
பிறவுண் வீதி, நீராவியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிள்ளைக்கு நீதி வேண்டும் மல்லாவியில் கவனயீர்ப்பு!



(கண்டாவளை)

**முல்லைத்தீவு வவுனிக்குளம் பகுதியில் ஒரு வருடத்திற்கு முன்னர் சடலமாக மீட்பட்ட இளைஞனின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.**

கனடா செல்ல தயாரான நிலையில் கடந்த 29.07. 2024 அன்று காணாமல் போன நிலையில் மல்லாவி வவுனிக்குளம் பகுதியிலிருந்து மறுநாள் சடலமாக மீட்கப்பட்ட மல்லாவி யோகபுரம் பகுதியினை சேர்ந்த சஜீவன் என்ற இளைஞனின் மரணத்திற்கு நீதி கோரி மல்லாவி பகுதியில் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சங்கம் என்பன இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்பு போராட்டம்ஒன்றினை நேற்றுக் காலை மேற்கொண்டிருந்தன

1வருடங்களாகியும் குறித்த இளைஞனின் படுகொலைக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்பட வில்லை எனவும் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மல்லாவி மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி நடை பவனியாக மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது. பின்னர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்று கூடி, "கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்து", "விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்று தா", "எமது பிள்ளைக்கு நீதி வேண்டும்" போன்ற பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கோஷமிட்டனர்.

இதேவேளை குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக நேற்றைய தினம் மல்லாவி பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மல்லாவி பொலிஸ் நிலையம் முன்பு ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுப்பில் சென்றுள்ளதாகவும் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இளைஞனின் படுகொலைக்கான நீதியினை தான் பெற்று தருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களிடம் தெரிவித்திருந்தார். இதேவேளை குறித்த வழக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த காலப் பகுதிக்குள் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தாவிடின் பாரியளவிலான போராட்டம் ஒன்றினை தாம் மேற்கொள்வோம் என்றும், சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தினையும் தாம் முன்னெடுப்போம் என்றும் எச்சரித்து,பொலிஸ் பொறுப்பதிகாரியிடம், வருகை தந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் துரைராஜா ரவிகரனால் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது.

இதேவேளை எதிர்வரும் பாராளுமன்ற நேரத்தில் பொது மக்கள்பாதுகாப்பு அமைச்சரிடம் இது தொடர்பில் தான் கதைத்து நடவடிக்கை எடுப்பதாகவும் ரவிகரன் எம்.பி தெரிவித்தார். (8-281-299-315)

## வர்த்தக உலகம்

# எசட்லைன் ஃபினான்ஸ் சமூக போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் "ரியசக்வல" முச்சக்கர வண்டி லீசிங் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது

டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின், நிதிச் சேவைகள் அரணாக அமைந்துள்ள எசட்லைன் ஃபினான்ஸ் லிமிடெட், புத்தாக்கமான "ரியசக்வல" முச்சக்கர வண்டி லீசிங் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டம், நகர மற்றும் கிராமப் பகுதியில் சிக்கனமான, முதன்மையான மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதில் பங்களிப்பு வழங்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனூடாக முச்சக்கர வண்டியை கொள்வனவு செய்வது அல்லது பரிமாற்றம் செய்வதற்கான சௌகரியமான தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார பங்கேற்பின் முதுகெலும்பாக வினைத்திறனான போக்குவரத்து அமைந்துள்ளது என்பதை எசட்லைன் ஏற்றுக் கொண்டுள்ளதுடன், நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் கிளைகளைக் கொண்டு, அவற்றினூடாக முன்னெடுக்கும் ஊக்குவிப்புத் திட்டத்தினூடாக, அவசியமான பகுதிகளில், தனிநபர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு அவசியமான லீசிங் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன.

நாடு முழுவதிலும் 59 கிளைகளைக் கொண்டுள்ள எசட்லைன் ஃபினான்ஸ், இலங்கை முழுவதையும் சேர்ந்த பிரதான நகரங்களை உள்வாங்கி ரியசக்வல திட்டத்தை முன்னெடுக்கிறது. ஜுலை மாதத்துக்கான திட்டமானது, கண்டி, குளியாப்பிட்டிய, முல்லைத்தீவு, பொலநறுவை, பண்டாரவளை, சிலாபம், யாழ்ப்பாணம், கேகாலை, குருநாகல், மஹியங்கனை,



மத்துகம, நிக்கவரெட்டிய மற்றும் மன்னார் ஆகிய நகரங்களில் நடைபெறுகிறது. ஒகஸ்ட் மாதத் திட்டம் மாத்தறை, காலி, தம்புள்ளை, தெஹியத்த கண்டிய, இரத்தின புரி, கிளி நொச்சி, வவுனியா, அம்பலாங்கொட, அனுராத புரம், பதுளை, கலேவெல, மாளிகாவத்தை, மொனராகலை, நீர்கொழும்பு மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

ரியசக்வல திட்டத்தினூடாக முச்சக்கர வண்டி கொள்வனவிற்காக அல்லது பரிமாற்றத்துக்காக கவர்ச்சிகரமான லீசிங் தீர்வுகள் வழங்கப்படும். நெகிழ்ச்சியான மற்றும் சுமையற்ற தவணைக் கட்டணங்கள் மற்றும் குறைந்த ஆவணப்படுத்தல் தேவைகளை கொண்டிருக்கும்.

வாடிக்கையாளர்கள் இந்த ஒப்பற்ற வாகனப் பரிமாற்றத் தெரிவுகளினூடாக அனுகூலம் பெற முடியும் என்பதுடன், விசேட காப்புறுதித் திட்டங்களை சிக்கனமான விலையில் அணுகவும் முடியும்.

ஒவ்வொரு புதிய லீசிங்கிற்கும் MRF டயர் இலவசமாக வழங்கப்படும். மேலும், வாடிக்கையாளர்கள் அசல் பஜாஜ் உதிரிப்பாகங்கள் மற்றும் MRF டயர்களின் மீது விசேட விலைக் கழிவுகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

ரியசக்வல தொடர்பான மேலதிக தகவல்களை www.assetlinefinance.lk எனும் இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது வாடிக்கையாளர் ஹொட்லைன் இலக்கமான 011 470 0100 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

# தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் நிகழ்வில் அரச சேவைகள் துறையில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தேசிய லொத்தர் சபை

62 வருட கால பெருமையை அதே வழியிலே நிரூபித்து சமூக நலன், அரச சேவையை கொண்டு செல்வதில் பங்களிப்பதுபோல் நாட்டின் நாலாபக்கமும் லொத்தர் வெற்றியாளர்களை உருவாக்கி மாபெரும் அரச மற்றும் தேசிய பணிக்கு பங்களிப்புச் செய்த தேசிய லொத்தர் சபை, இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் வைபவத்திலே அரச சேவைகள் துறையிலே, மீண்டுமொரு முறை இரண்டாம் இடத்தைப் பெற்று பொது சேவைகள் மற்றும் லொத்தர் உலகின் அரசனாக முடிசூடித் துள்ளது.




## பல இலட்சம் பெறுமதியான வலைகள் இந்திய மீனவர்களால் அழிப்பு

(கரணவாய்)

வடமராட்சி - பருத்தித்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் யாழ். மாவட்ட மீனவர்களின் வலைகள் அழிக்கப்பட்டு வருவதாக கடற்றொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். குறிப்பாக பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக எல்லை தாண்டிய இந்திய மீனவர்களது இழுவை மடி படகுகளின் மீன்பிடி அதிகரித்துள்ளது.

இதனால் நாளாந்தம் எமது வலைகள் அறுத்தழிக்கப்பட்டு வருகிறது. இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இழுவைப்படகுகளால் அறுத்தழிக்கப்படுவதுடன் வலைகள் காணாமல் போவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவும் இந்திய மீனவர்களது இழுவைப்படகுகளின் எல்லை தாண்டிய மீன்பிடியால் பருத்தித்துறை பகுதி கடற்றொழிலாளர்களது வலைகள் அழிக்கப்பட்டுள்ளது.அத்துடன் உள்ளூரில் சட்டவிரோத மீன்பிடியான சுருக்கு வலைத் தொழில் நடவடிக்கையால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்த மீன்பிடி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும், இந்திய மீனவர்களின் அத்துமீறலையும் தடுத்து நிறுத்த வேண்டும் என கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# உக்ரைன் - ரஷ்ய போர் நிறு

# ரஷ்யாவுக்கான காலக்கெடு

# குறைத்து ட்ரம்ப் கெடு




**(வோஷிங்டன்)**


**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைனில் போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு தான் அளித்த 50 நாள் காலக்கெடுவை 10 முதல் 12 நாட்களாகக் குறைத்துள்ளார்.**

ஆகஸ்ட் 7-9இற்குள் அமைதிப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என ட்ரம்ப் நிபந்தனை விதித்துள்ளார். இல்லையெனில் ரஷ்யா மீது வர்த்தக கட்டுப்பாடுகளும் 100 சதவீதம் வரியும் விதிக்கப்படும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"புடின் ஒரு ஒப்பந்தம் செய்ய வேண்டும், பலர் இறக்கிறார்கள். இனி காத்திருக்க எந்தக் காரணமும் இல்லை, எந்த முன்னேற்றமும் இல்லை" என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

காலக்கெடு குறைக்கப்பட்ட போதிலும், உக்ரைன் நகரங்கள் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஒரே இரவில் 300இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள், 4

## சீனாவில் கனமழைக்கு இதுவரை 34 பேர் பலி



(பீஜிங்)

சீனாவில் மழை, வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது.

80,000 பேர் மாற்று இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

தலைநகர் பீஜிங்கில் வரலாறு காணாத அளவுக்கு கனமழை கொட்டி வருகிறது.

இடைவிடாத மழையால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளன.

மியுன், யாங்கிங் ஆகிய மாகாணங்கள் கடுமையாக சேதம் அடைந்துள்ளன. ஒரே இரவில் கனமழை கொட்டித் தீர்த்ததால் எங்கும் வெள்ளநீர் சூழ்ந்து மக்கள் கடும் அவதிக்கு ஆளாகி இருக்கின்றனர். ஏராளமான கார்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

பாதிக்கப்பட்ட 80,000 மக்கள் பீஜிங்கிற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

அவர்களில் 17,000 பேர் மியுன் மாகாண மக்கள் ஆவர்.

தொடர்மழையால் ஹெபாய் மாகாணம் லுனான் கவுன்டியில் நிலச்சரிவு ஏற்பட்டு, 4 பேர் பலியாகி உள்ளனர். 8 பேரை காணவில்லை.

மியுன் மாகாண அணைகளில் நீர்மட்டம் அபாய அளவை எட்டியதால் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

இதனால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ஒட்டுமொத்தமாக மழை, வெள்ளத்திற்கு இதுவரை 34 பேர் பலியாகி உள்ளனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் மீட்பு பணிகளும் முடுக்கி விடப்பட்டு உள்ளன. (நி)

## இஸ்ரோ – நாசா இ

## கூட்டு செயற்

## இன்று வி

(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவும் அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவும் இணைந்து தயாரித்த முதல் கூட்டு செயற்கைக் கோளான நிசார் இன்று விண்ணில் ஏவப்படவுள்ளது.


இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி-எப்16 ஏவுகணை மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து இன்று மாலை 5.40 மணிக்கு செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ருத்தம்
டுவை
நிபிடி




குரூஸ் ஏவுகணைகள் மற்றும் 3 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ரஷ்யா ஏவியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது. (நி)


## இணைந்து தயாரித்த ற்கைக் கோள் விண்ணிற்கு

கின்றன.

இதேவேளை, "இஸ்ரோ-நாசா" இணைந்து பூமியைக் கண்காணிக்கும் ரேடார் செயற்கைக் கோளான "நிசார்" செயற்கைக் கோளை உருவாக்கியுள்ளது எனவும் இந்த செயற்கைக்கோள் 12 நாட்களுக்கு ஒருமுறை உயர் தெளிவுத்திறன் கொண்ட பூமித் தரவுகளை வழங்கும் எனவும் இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்துள்ளார். (நி)




# நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கு தாய்லாந்து - கம்போடியா இணக்கம்



(மலேசியா)

தாய்லாந்தும் கம்போடியாவும் உடனடி நிபந்தனையற்ற போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனை மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இரு நாடுகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் அமுலுக்கு வருகிறது

தாய்லாந்து - கம்போடியா ஆகிய இரு நாடுகளுக்கிடையில் சமீபத்தில் நடைபெற்ற எல்லை மோதல்களுக்குப் பின்னர், பிராந்திய அமைதியை நிலைநாட்டும் முயற்சியாக இன்று மலேசியாவின் கோலாலம்பூரில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல் அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, குறித்த பேச்சவார்த்தையில் அமைதியான தீர்வு எட்டப்படும் என எதிர்பார்த்திருந்த நிலையில், கம்போடியா, நீண்டகாலமாக நிலவும் சர்ச்சைக்கு அமைதியான தீர்வைக் காண விரும்புவதாக தெரிவித்தது.


இதேவேளை, தாய்லாந்துக்கும் கம்போடியாவிற்கும் இடையே ப்ரே விஹார் கோயில் அமைந்துள்ள எல்லைப் பகுதியில் நடந்த மோதல்களால் பல உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

இதனடிப்படையில், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை சிறப்பு கூட்டத்திற்குப் பின்னர், கம்போடியா உடனடி போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

எனவே இவ்வாறான நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலை முடிவுக்கு கொண்டுவர மலேசிய பிரதமர் தலைமையில் கம்போடியா - தாய்லாந்து பிரதமர்களுடன் கோலாலம்பூரில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

குறித்த பேச்சுவார்த்தை கூட்டத்தில் அமெரிக்கா மற்றும் சீனாவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இந்தியா - அமெரிக்கா இடையிலான போர் ஏவுகணை ஒப்பந்தம் விரைவில்



(வோஷிங்டன்)

இந்தியா - அமெரிக்கா இடையே போர் ஏவுகணை ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாக உள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு பின்னர் 20[illegible] ஆண்டு முதல் [illegible]டில் போர் ஏவுகணைகள் இந்தியா வந்தடைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பஹல்காமில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு பின்னர் ஆயுத கொள்முதலில் இந்திய பாதுகாப்பு துறை கவனம் செலுத்தி வருகிறது.

அதன் அடிப்படையில், வானில் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களை கொள்வனவு செய்ய இந்திய மத்திய அரசு ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ், பாதுகாப்பு அமைச்சகம் அமெரிக்காவில் இருந்து இந்திய விமானப் படைக்கு போர் ஏவுகணைகளை இறக்குமதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்ற நிலையில் இந்திய விமானப் படையுடனான ஆரம்ப ஒப்பந்தம் 35 மில்லியன் அமெரிக்க டொலர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த குறித்த ஒப்பந்தம் அவசரகால கொள்முதல் திட்டத்தின் கீழ் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna, Sri Lanka
## Faculty of Management Studies and Commerce
## Master of Business Administration
## Intake IX-2023/2024

The Faculty of Management Studies and Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA - Intake IX) - 2023/2024 and invites applications for the admission from qualified candidates. Details of the course can be obtained from the website of the Faculty of Management Studies and Commerce: www.maco.jfn.ac.lk.

**Admission requirement**

A candidate seeking admission to MBA should possess at least any one of the following qualifications and exhibit a satisfactory level of English language proficiency:

1) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in Business/ Public Administration/ Business Management/ Commerce/ Business Administration/ Management Studies
2) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution including 30 credits in business/ public administration/ economics/ commerce/management studies
3) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline

   **and**

   a Postgraduate Diploma in business/public administration//business management/ commerce/business administration/ management studies
4) A Bachelor's Degree from a recognised University/ Higher Education Institution in any discipline

   **and**

   a minimum of one-year post qualifying work experience in a management capacity at an organization acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna
5) Having at least one of the approved list of professional qualifications (for details please visit: https://www.maco.jfn.ac.lk/index.php/mba/), with a minimum of three (03) years post-qualifying work experience in a management capacity at the organization(s) acceptable to the Faculty Board and the Senate of the University of Jaffna
6) Any other qualification/experience recommended by the Faculty Board and the Senate of the University of Jaffna

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Duration | - | Two years (Four (04) Semesters) |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee for the MBA program is LKR Four Hundred Thousand (LKR 450,000.00). This can be paid in two installments as given below:

| | | |
|---|---|---|
| First Year | : | **Rs 250,000** |
| Second Year | : | **Rs 200,000** |

**The closing date for application: 31.08.2025.**

**APPLICATION PROCEDURE**

| | | |
|---|---|---|
| Application Fee | : | **Rs 2,000** |

Online Application form, Procedure and Paying in voucher can be found from the website www.maco.jfn.ac.lk

Further information could be obtained through **021 221 6394 / 021 222 3610**.

**Registrar**

(C-3523)

# கிருஸ்ணா அடைவு கடை

**பதிவு இல J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2024 ஆம் ஆண்டு (30.07.2024) இற்கு முன்னர் அடைவு வைத்த நகைகள் யாவற்றையும் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்கு (30.08.2025) முன்னர் மீட்கவும்.

மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 30.08.2025 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- 2024 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் (2024.07.30) திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல : 370, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311, 021 222 5180,**
**077 080 4656.**

**உரிமையாளர்,**
**இல.09 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(4902)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 11 காரைதீவு வீதி, ஆதன இல 279 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பாக செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ் 22.01.2014ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 2483 இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், 1960ஆம் ஆண்டிலிருந்து சொந்தமும் ஆட்சியுமானதாக இருந்து அவர்கள் காலமாகிவிட எமக்கடைந்த முதுசமும், எனது நீண்ட கால ஆட்சியுமானதாகும், இவ்வுரித்து தொடர்பில் எவ்வித பிசகு தடைகள் வராதென்றும் அவ்வாறு நேருமிடத்து நானே பொறுப்பாளி ஆவேன் என்றும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகிறேன்.

குறித்த ஆதனத்தை செபஸ்ரியாம்பிள்ளை அமலதாஸ் மறுநாமம் அமலதாஸன் 27.07.2014 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 2134ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அமலதாஸன் பெண் யூடித் மெலானி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/85ஆம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "சுரிவெளிக்காடு" நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு) உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராசா அவர்களால் 23.01.2004ஆம் திகதி அளந்து விபரித்த 2272 ஆம் இலக்க படத்தின்படி

இதற்கு எல்லைகள்:-
கிழக்கு :- காரைநகர் வீதி.
வடக்கு :- முடிக்குரிய காணி.
மேற்கு :- லாகனினாதனம்.
தெற்கு :- ஜோர்ஜ் மரியதாசும் பெண் பிரான்சிஸ்க்கம்மாவின் ஆதனமும்.
இதடங்கலும்:

தற்போது இவ்வாதனத்தை அமலதாஸன் பெண் யூடித் மெலானி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அமலதாஸன் பெண் யூடித் மெலானி என்பவர் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3521)

# இராசிபலன்

**30.07.2025**
**ஆடி 14, புதன்கிழமை**
**சஷ்டி பின்னிரவு 3.49 மணிவரை**

**அத்தம் முன்னிரவு 11.44 மணிவரை**
**சுப நேரம் 4.33-6.03 மணிவரை**
**இராகுகாலம் 12.03-1.33 மணிவரை**
**சஷ்டி விரதம்**

**சந்திராஷ்டமம்: சதயம், பூரட்டாதி**


**வளவன்**




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.





பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.





புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம்.





மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.





பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.





விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.





வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.





வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.





செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி அதிகரிக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**உண்மையைத் தேடு, பிழையை மன்னித்து விடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்படும்

## பிரதமர் ஹரிணி உறுதி

**(கொழும்பு) — உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதுவும் மறைக்கப்படாது. எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணையை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏற்கின்றனரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினை இல்லை. ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடரும் என குறிப்பிட்டுள்ளார். (ஙி)

# பூமியை நெருங்கும் சிறுகோள்; நாசா சொல்வதென்ன?

"2025 OL1" என்ற சிறுகோள் இன்று பூமியை நெருக்கமாகக் கடந்து செல்லும் என்று நாசா தெரிவித்துள்ளது. இந்த சிறுகோள் விமானத்தின் அளவைப் போன்றது. ஆனால் இது பூமியைப் பாதுகாப்பாகக் கடந்து செல்லும். எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாது என்று கூறப்பட்டுள்ளது.

நாசா தகவலின்படி, இந்த சிறுகோள் சுமார் 110 அடி அகலமானது. பயணிகள் விமானத்தின் அளவுடன் ஒப்பிடப்பட்ட இது மணிக்கு கிட்டத்தட்ட 27,200 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்து, பூமியிலிருந்து 12.9 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் கடந்து செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தூரம் பாதுகாப்பானதாகத் தோன்றினாலும், விண்வெளி அளவில் இது கண்காணிக்கப்பட வேண்டிய அளவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாசா அதிகாரிகள் இந்த விண்கல் ஆபத்தானது இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஒரு விண்பொருள் ஆபத்தானதாக வகைப்படுத்தப்பட, அது 74 லட்சம் கிலோமீற்றருக்குள் வரவேண்டும். குறைந்தது 85 மீற்றர் அகலமாக இருக்க வேண்டும். 2025 OL1 இந்த இரண்டு அளவுகோல்களையும் பூர்த்தி செய்யவில்லை. இருப்பினும் விண் வெளி விஞ்ஞானிகள் தொடர்ந்து அதனை கண்காணித்து வருவதாக கூறுகின்றனர். இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோ இந்த நிகழ்வை உன்னிப்பாக கவனித்து வருகிறது. (ஙி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Bsc, Civil Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15834 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>1 இல்செவ்<br>கி.பா: 52 1/4<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BIT, Online work<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15546 |
| பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்- விசாகம்<br>1இல்செவ்<br>உயரம்: 5'10"<br>கி-பா: 17 1/2<br>தகைமை/தொழில்: HNDE, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15837 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>கி-பா:43<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HND(Library Science), நூலகர்<br>எதிர்பார்ப்பு:தகுதியானஆண்.<br>விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15547 |
| பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>1இல் செவ்<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: Engineer(Swiss)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: B/15840 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>12 இல் செவ்<br>உயரம் -5<br>தகைமை/தொழில்-Phamacist(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15549 |
| பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 18 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் -DIP IN Computer, Store Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15844 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் -College,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.<br>விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15553 |
| பிறப்பு-1981-இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>12இல் சூரிசெவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில் -A/L, Gov work<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15851 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>8இல்செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் -CIMA, Assistant Accountant<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/15555 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



## குடியியல் நடபடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான பொது அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

1. நாகரத்தினம் தவராசா
நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.
2. சின்னத்தம்பி கனகலிங்கம்
மானிப்பாய் வீதி, உடுவில்,
சுன்னாகம்.
3. திருச்செல்வம் இளங்கீதன்
இல.27/14, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
4. கந்தையா சின்னராசா
உதயசூரியன் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.
5. மாரிமுத்து நாகராசா
உதயசூரியன் வீதி,உடுவில்,
சுன்னாகம்.
6. திருமதி. அன்புசுலோஜினி சிவராமன்
கே.கே.எஸ் வீதி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

வழக்காளிகள்

வழக்கிலக்கம்: நானாவிதம்/581/2025

எதிர்

1. சிவசோதி ரமேஸ்
(தலைவர்)
2. ஜெகதீஸ்வரன் பிருஜன்
(உப தலைவர்)
3. நாகராசா பிரசாந்தன்
(தற்காலிக செயலாளர்)
4. துரைராசா எமில்ராஜ்
(உப செயலாளர்)
5. செல்வராசா நிசாந்தன்
(தற்காலிக பொருளாளர்)
6. கந்தசாமி கபிலன்
(நிர்வாக உறுப்பினர்)
7. நவரத்தினம் ரமேஸ்வரன்
(நிர்வாக உறுப்பினர்)

அனைவரும்
ஸ்ரீ பெரிய நாயகி அம்பாள் ஆலயம்,
உதயசூரியன் வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

(4930)

எதிராளிகள்

மேற்படி விடயம் தொடர்பில் உடுவிலில் அமைந்துள்ள ஸ்ரீ பெரிய நாயகி அம்பாள் ஆலயத்தின் உபயகாரர்களும் குறித்த ஆலயத்தின் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களுமான சிலரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது பொது நலனுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் குறித்த ஆலயத்தில் அக்கறையுள்ள அனைவருக்கும் குடியியல் நடபடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் ஏற்பாடுகளுக்கமைய இவ்வறிவித்தல் வழங்கப்படுகிறது. எனவே இவ்வழக்கில் அக்கறையுள்ளவர்கள் 2025.08.01ம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்பகல் 9.00 மணிக்குப் பிரசன்னமாகுமாறு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

மன்றின் கட்டளைப்படி

ஒப்பமிடப்பட்டுள்ளது
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்.
நமர் முத்திரை இடப்பட்டுள்ளது.

வரைபு
ஒப்பமிடப்பட்டுள்ளது
A.S.அற்புதராஜ்
வழக்காளிகளின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 833



நீயும் உடன் வந்தால் அத்தை உடனே ஓடி மறைந்தாலும் மறைந்து விடுவாள். அவளிடம் நான் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியாது"

சேந்தன் அமுதன் பெருமூச்சுவிட்டு "நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான், அப்படியானால், இப்போதே உன்னிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்!" என்றான்.

"இல்லை, இல்லை! வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு உன் மாமன் முதலியவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு போ! இல்லாவிட்டால் என்னிடம் எல்லாரும் சண்டைக்கு வருவார்கள்!"

வழியில் இன்னொரு இடத்தில் ஒரு புதரின் மறைவில் நின்று ஒரு பெண்ணும் ஆணும் பேசிக் கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள்.

"ஆகா! அண்ணி ராக்கம்மாள் போலிருக்கிறது. இன்னமும் இரகசியப் பேச்சு முடிந்தபாடாக இல்லை. இப்போது வந்திருப்பவர்கள் யார்? அந்தப் பாண்டிய நாட்டு ஒற்றர்கள்தானா? வேறு யாரா வதா?" என்று பூங்குழலி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

ராக்கம்மாள் புதர் மறைவிலிருந்து வெளிப்பட்டு வந்தாள். பூங்குழலியைப் பார்த்ததும் சிறிது திடுக்கிட்டாள். ஆனால் அதை உடனே மறைத்துக் கொண்டு வேகமாக அவர்களருகில் நெருங்கி வந்தாள்.

"பூங்குழலி! இத்தனை நாள் எங்கே தொலைந்து போயிருந்தாய்? உன் அப்பாவும் அண்ணனும் ரொம்பக் கவலைப்பட்டுப் போனார்களே!" என்றாள்.

"எதற்காகக் கவலைப்பட வேண்டும்? நான் வீட்டை விட்டுப் போவது இதுதான் முதல் தடவையா!"

"இந்தத் தடவை உன் அத்தை மகனையும் அழைத்துக் கொண்டு போய் விட்டாயல்லவா? ஒருவருக்கும் சொல்லாமல் நீங்கள் கலியாணம் செய்து கொண்டு விடுவீர்களோ என்று கவலை!"

"அண்ணி! இந்த மாதிரி அசட்டுப் பேச்செல்லாம் என்னிடம் பேச வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? இன்னொரு தடவை இவ்வாறு பேசினாயோ?"

"இல்லையடி பெண்ணே! இல்லை! நீ உன் அத்தை மகனைக் கலியாணம் செய்து கொண்டால் எனக்கு என்ன? அரச குமாரனைக் கலியாணம் செய்து கொண்டால் எனக்கென்ன? இலங்கையிலிருந்து உன் பெரிய அத்தை வந்து உன்னை தேடிக் கொண்டிருந்தாள். அவளை நீ பார்த்து விட்டாயா?" என்றாள்.

"இல்லை, இன்னும் பார்க்கவில்லை" என்று சொன்னாள் பூங்குழலி.

வீடு சேர்வதற்குள் சேந்தன் அமுதனிடம் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, "அமுதா! ஜாக்கிரதை! அண்ணி பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்தவள். அவள் உன் வாயைப் பிடுங்கப் பார்ப்பாள் ஒன்றுக்கும் பதில் சொல்லாதே!" என்றாள்.

"இங்கே நான் இருக்கும் இன்னும் சிறிது நேரமும் ஊமையாகவே இருந்து விடுகிறேன்" என்றான் சேந்தன் அமுதன்.

அன்று பிற்பகலில் பூங்குழலி மறுபடியும் நாகைப்பட்டினத்தை நோக்கித் தன் ஓடத்தைச் செலுத்தினாள். படகில் ஊமை ராணி வீற்றிருந்தாள். ஊமை ராணியின் அருகில் இருக்கும் போது பூங்குழலி எப்போதும் மன நிம்மதி அடைவது வழக்கம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கண்டெடுத்த கடிகாரம்



(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் இவர்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கடிகாரத்தின் அழகு அவர்களை கவர்ந்தது.

இதை வீட்டுக்கு கொண்டு போகலாமா என்று சுகுமாரனின் தங்கை கேட்கவும், வேண்டாம் இதை யாரோ இந்த வழியா போனவர்கள் கையில் இருந்து கழண்டு விழுந்திருக்க வேண்டும்.

நாம காலையில ஸ்கூலுக்கு போய் நம்ம வாத்தியாரிடம் கொடுத்து விடுவோம், என்று சொல்லிவிட்டு அதை தன் கால் சட்டையில் போட்டுக் கொண்டு இருவரும் "பூ" பறிக்க தோட்டத்துக்குச் சென்று விட்டனர்.

பூ பறித்து கொடுத்து கூலியை பெற்றுக் கொண்டு வந்த இருவரும் அவர்கள் அம்மாவிடம் கொடுத்து விட்டு, அவசர அவசரமாய் பள்ளிக்கு கிளம்பி விட்டனர். ஆனால் அந்தக் கைக் கடிகாரத்தை வீட்டில் குளிப்பதற்கு முன் ஒரு இடத்தில் வைத்த சுகுமாரன் பள்ளிக்கு செல்லும் அவசரத்தில் அதை மறந்து விட்டான்.

இவர்கள் பள்ளிக்குச் சென்ற பின் தான் ஞாபகம் வந்தது கைக் கடிகாரத்தை வீட்டிலே விட்டு வந்தது. சரி நாளை எடுத்து வந்து கொடுத்து விடலாம் என்று சமாதானம் செய்து கொண்டான் சுகுமாரன்.

அன்று அந்த ஊரில் பொலிஸ் வண்டிகள் வந்தும் போய்க் கொண்டும் இருந்தன. பள்ளி நடந்து கொண்டிருக்கும் பொழுதே அந்த வண்டிகள் செல்வதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாலை வீட்டிற்கு வந்த பின்னால் அவர்கள் அப்பா கன்னையன் தான் சொன்னார், நமது பக்கத்து ஊரில் இருக்கற கோயிலில் இருந்து சிலைகளை யாரோ கடத்திட்டு போயிட்டாங்களாம்.

அதனாலதான் பொலிஸ் நம்ம ஊரு வழியா வந்துட்டும் போயிட்டும் இருக்கு.

காலை வழக்கம் போல பள்ளிக்கு கிளம்பும் போது ஞாபகமாய் அந்த "கைக் கடிகாரத்தை" எடுத்து புத்தகப் பையில் போட்டுக் கொண்டான். வகுப்பு ஆசிரியரிடம் தான் பாதையில் கண்டெடுத்த கைக் கடிகாரத்தை கொடுத்தான். அவர் அவனையும் அழைத்துக் கொண்டு தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் அழைத்துச் சென்று இந்தக் கடிகாரத்தை கொடுத்து, விபரத்தைத் தெரிவித்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். – அரிஸ்டாட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எமது மக்கள் தொகை பற்றி கவனம் செலுத்துங்கள்

இது ஓர் உண்மைச் சம்பவம். காரைநகரில் விசுவலிங்கம் என்பவர் சேர்மனாக இருந்த காலம். அப்போது காரைநகரில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்தின் நோக்கம் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்துவதாகும். கூட்டத்துக்கு கொழும்பிலிருந்தும் வைத்திய நிபுணர்கள் வருகை தந்திருந்தனர்.

இதன்போது வாழ்த்துரை வழங்குவதற்காக சேர்மன் விசுவலிங்கம் அழைக்கப்பட்டார். கூட்டத்தில் எழுந்த சேர்மன் விசுவலிங்கம்; தமிழ் மக்களின் தொகை அதிகரிக்க வேண்டும். எங்கள் இனம் குறைந்து போகுமாயின், அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தனது கருத்தை முன்வைத்து குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராக உரையாற்றிய போது, கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் அதிர்ந்து போயினர்.

ஆம், ஒரு குடும்பக் கட்டுப்பாட்டுக்கூட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராகக் காரைநகர் சேர்மன் விசுவலிங்கம் ஆற்றிய உரைபற்றி யாழ்ப்பாணத்தின் சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்த அமரர் இ.தெய்வேந்திரன் அவர்கள் அப்போது கூறியதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

ஆம், எங்களின் குடித்தொகை வலுவாகக் குறைந்து போகிறது.

நாமிருவர் நமக்கொருவர் என்பதாகவே எம் தமிழ் இனத்தின் நிலைமை இருக்கிறது.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முக்கியமான காரணம் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பு என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், குழந்தைகளைப் பெற்று அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் நம் பெற்றோர்கள் படுகின்ற அவஸ்தையை நினைக்கும்போது, இது என்ன வாழ்க்கை என்ற வெறுப்பு ஏற்படுகிறது.

பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம், தனிப்பட்ட வகுப்புகள் என பாலர் பாடசாலையில் தொடங்கிய அந்தரிப்பு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை – சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகள் என நீண்டு செல்லும்போது, பெற்றோர்கள் மட்டுமல்ல மாணவர்களும் விரக்திக்கு ஆளாகின்றனர்.

இங்குதான் கல்விமுறையில் மாற்றம் வேண்டியிருக்கிறது.

ஆம், இதே கல்வி முறை நீளுமாக இருந்தால், குறிப்பாக எங்கள் யாழ்ப்பாணத்துப் பெற்றோர்கள் நோயாளிகளாகவும் உளப்பாதிப்புடையவர்களாகவும் ஆக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

எனவே பொருத்தமான – சுமையற்ற – வாழ்வை மகிழ்வானதாக்கவல்ல கல்வி முறைக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும்.

அதேநேரம் எங்கள் சனத்தொகை குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும் என எங்கள் மண்ணைச் சேர்ந்த இலண்டனில் வைத்திய நிபுணராகப் பணிபுரியும் மருத்துவர் செல்வ லிங்கம் தெய்வகுமார் அவர்கள் கூறிய கருத்து இங்கு கவனிக்கத்தக்கது.

நாம் இருவர் நமக்கு நால்வர் என்ற குடும்ப இலக்கை வலியுறுத்த வேண்டும் என அவர் கூறிய கருத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்பதும் அதை அமுல்படுத்த பிரசாரம் செய்வதும் அவசியமாகிறது.

# நம்பி வாக்களித்த மக்களை அநுர அரசு ஏமாற்றக் கூடாது

## பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா

(கொழும்பு)

நாட்டில் கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் பரவலாகப் பேசப்படுகிறது. கல்வித்துறையில் பாரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்வதாகவே தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மக்கள் அதனை நம்பியே வாக்களித்தனர்.

எனவே இதனை அரசியலாகப் பார்க்காமல் அரசாங்கம் அதன் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் பரவலாகப் பேசப்படுகிறது. கல்வித்துறையில் பாரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்வதாகவே தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் அதை நம்பி வாக்களித்தனர். இது அரசியல் அல்ல. அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஜனவரியிலிருந்து 1 - 6ஆம் வகுப்புக்களில் பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்கள் இது தொடர்பில் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு முரணான கருத்துக்களையே கூறி வருகின்றனர்.

இது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

கல்வியில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் ஜனாதிபதியின் கருத்துக்களுக்கும் ஆளுங்கட்சியினரின் கருத்துக்களுக்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகளுக்கு என்ன காரணம்?

பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது மாத்திரம் கல்வி சீர்திருத்தம் அல்ல. ஆசிரியர்களுக் குப் பயிற்சியளித்தல் உட்பட அனைத்தும் அதில் அடங்கும். அதே போன்று பாடசாலைக் கல்வியை மாத்திரம் மறுசீரமைப்பதாலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது.

பாராளுமன்றத்தில் சட்டத்தின் ஊடாகவே இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். 5 மாதங்களுக்குள் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறது என்பது எமக்குத் தெரியாது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். எனவே அரசாங்கம் இந்த விவகாரத்தில் தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

# வீட்டில் நகை களவெடுத்து இளைஞனுக்கு மோ.சைக்கிள்

## யுவதி உட்பட மூவருக்கு விளக்கமறியல்

இளைஞனுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கி கொடுக்க, நகைகளைக்களவாடிய யுவதி, யுவதிக்கு உடந்தையாக செயற்பட்ட யுவதியின் நண்பி மற்றும் குறித்த இளைஞன் ஆகிய மூவரையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ரிக் ரொக் சமூக வலைத்தளங்களில் தனது காணொளிகளை பதிவேற்றி பிரபலமானவராக தன்னைக் காட்டிக்கொண்டு வந்துள்ளார்.

குறித்த இளைஞனுடன் ரிக் ரொக் மூலம் அறிமுகமான சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த யுவதி அவரைக் காதலித்து வந்துள்ளார்.

அந்நிலையில் தனது காதலனுக்கு, அதிநவீன மோட்டார் சைக்கிள் ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்காகவும் காதலன் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காகவும் தனது வீட்டில் இருந்து சுமார் 19 பவுண் நகையைக் களவெடுத்து அதனைக் காதலனிடம் கொடுத்துள்ளார்.

வீட்டிலிருந்த நகைகள்காணாமல்போனமை தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் யுவதி மீது சந்தேகம் கொண்டு அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது வீட்டில் இருந்த நகைகளை தான் களவெடுத்து காதலனுக்கு வழங்கியதை ஒப்புக் கொண்டுள்ளார்.

யுவதியின்வாக்கு மூலத்தின் அடிப்படையில் காதலனைக்கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன் அடிப்படையில்வீட்டில்நகைகளைக் களவெடுத்த யுவதி, அவரது காதலன், யுவதி வீட்டில் நகைகளைக் களவெடுப்பதற்கு உடந்தையாகச் செயற்பட்ட யுவதியின் நண்பி, நகைகளை விற்க உதவியவர்கள், நகைகளை வாங்கியவர்கள் என ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு நபர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய போது நகைகளைத் திருடிய யுவதி, அவரது காதலன் மற்றும் திருட்டுக்கு உடந்தையாகச் செயற்பட்ட யுவதியின் நண்பி ஆகிய மூவரையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் ஏனைய நால்வரையும் பிணையில் செல்ல அனுமதித்தார்.

அதேவேளை திருடப்பட்ட நகைகளில் ஒரு தொகையும் நகைகளை விற்று வாங்கிய அதிநவீன மோட்டார் சைக்கிள் என்பவற்றை பொலிஸார் மீட்டு சான்றுப் பொருளாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தியதையடுத்து அவை நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப் பட்டுள்ளது. (ம-7,33)

# வெளிவயல் முத்துமாரிக்கு இன்று கொடியேற்றம்

அளவெட்டி தெற்கு வெளிவயல் திருவருள் மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தின் விசுவாவசு வருட பிரம்மோற்சவப் பெருவிழாவானது இன்று புதன் கிழமை சஷ்டித் திதியும் அத்த நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபவேளையான காலை 11.00மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் இடம்பெறும் இவ்வாலய மகோற்சவந் தனில் 10ம் திருவிழாவான தேர்த்திருவிழா எதிர்வரும் 08.08.2025 வெள்ளிக்கிழமையும் மறுநாள் தீர்த்த உற்சவமும் சிறப்புற இடம்பெறவுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 24

சொக்கன்

பொதுவாக ஒருவருக்கு விசா கொடுப்பது என்றால் நிறைய விடயங்களைக் கவனித்து உறுதிப்படுத்த வேண்டியிருக்கும். நடுவில் ஏதாவது ஒரு சின்ன சந்தேகம் வந்தாலும் கூட தயவு தாட்சண்யம் பார்க்காமல் அந்த விசா விண்ணப்பத்தை நிராகரித்து விடுவார்கள்.


ஆனால் பாஸ்போட் அதிகாரி போர்வையில் மறைந்திருந்த ஃபிரான்சிஸ் ஃபோலி தன்னிடம் வருகிற யூதர்களின் விண்ணப்பங்களைமட்டும் தனியே பிரித்து எடுத்தார். அவர்கள் யார்? எவர் என்பதைப்பற்றிக் கவலையே படவில்லை. விதிமுறைகளையெல்லாம் ஓரங்கட்டி விட்டு எல்லோருக்கும் விசா கொடுத்தார் பாவம் அவர்கள் எப்படியாவது வெளியே போய்ப் பிழைத்துக்கொள்ளட்டும் என்று.

இதில் வேடிக்கை என்னவென்றால் அப்போது ஜேர்மனியிலிருந்து தப்பிச் செல்ல விரும்பிய பல யூதர்களுக்கு பாஸ்போர்ட்டே இல்லை. அவர்களுக்கெல்லாம் கூட போலி ஆவணங்களை உருவாக்கி திருட்டு பாஸ்போர்ட் விசா வாங்கிக் கொடுத்து அனுப்பியிருக்கிறார் ஃபிரான்சிஸ் ஃபோலி.

இப்படி ஃபிரான்சிஸ் ஃபோலியால் காப்பாற்றப்பட்ட யூதர்களின் சரியான எண்ணிக்கை யாருக்கும் தெரியவில்லை. நூறு இருநூறு என்று தொடங்கி எட்டாயிரம் பத்தாயிரம்வரை கணக்குச் சொல்கிறார்கள்.

ஆச்சரியமான விடயம் இந்த யூதர்களையெல்லாம் ஃபிரான்சிஸ் ஃபோலி நேரில் பார்த்தது கிடையாது. அவர்களுக்கும் இந்த இங்கிலாந்து உளவாளி தான் தங்களைக் காப்பாற்றி வாழவைத்திருக்கிறார் என்கிற உண்மை தெரியாது!

அப்போது ஜேர்மனியில் இயங்கிக் கொண்டிருந்த பழைய மொசாட் ஏஜென்ட்களுக்குக்கூட ஃபிரான்சிஸ் ஃபோலியைப்பற்றித் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம் தான். அவர்களைப் பொறுத்தவரை கொத்துக்கொத்தாக நிறைய யூதர்கள் ஜேர்மனியிலிருந்து வெளியே வருகிறார்கள் அவர்களையெல்லாம் பாலஸ்தீனத்துக்குக் கொண்டுசெல்வது எப்படி என்பதில் மட்டுமே முழுக்கவனம் செலுத்தினார்கள்.



அங்கே பாலஸ்தீனத்திலும் யூதர்கள் மீது கருணை காட்டிய இங்கிலாந்து அரிகாரிகள் நிறையப் பேர் இருந்தார்கள். அவர்களுடைய தயவால்தான் மொசாட் பல ஆயிரம் யூதர்களை ரகசியமாகஉள்ளேகொண்டு செல்ல முடிந்தது.

இப்படி மொசாட் லிஅலியா பெட்மூலம் உலகெங்கிலுமிருந்து பாலஸ்தீனம் வந்து சேர்ந்த யூதர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு லட்சம். இவர்களெல்லாம் ஹிட்டலர் கையில் சிக்கினால் என்ன கதியாகியிருப்பார்கள் என்று யோசித்த யூத சமூகம் மொசட்டை நன்றியுடன் பார்த்தது. மக்கள் மத்தியில் மொசாட் வீரர்களுக்கு மரியாதை அதிகரிக்கத் தொடங்கியது.

## உப்புமா கிண்ட ஒன்பது பேர்

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்துச் சரியாக ஒன்பது மாதங்கள் கழித்து 1948 மே 15 ஆம் திகதி யூதர்களுக்கான தனி தேசம் உருவாக்கப்பட்டது. அதன் பெயர் இஸ்ரேல்.

ஆனால் நம்மைப் போல் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவதற்கும் பாடுவதற்கும் இஸ்ரேலுக்கு நேரமில்லை. எல்லாத் திசைகளில் இருந்தும் அவர்களை நெருக்கியடித்துத் துரத்துவதற்கு அதிரடிக்கார மச்சான்கள் காத்திருந்தார்கள்.

இஸ்ரேல் யோசித்தது இதுவரை பாதுகாப்புக்கு இருந்த பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறி விட்டார்கள். இனிமேல் பாலஸ்தீனர்கள் அவர்களுடைய ஆதரவு நாடுகள் நம்மிடம் வாலாட்டாமல் தடுக்க வேண்டுமென்றால் நமது உளவுத்துறையைப் பலப்படுத்த வேண்டும். அக்கம் பக்கத்தில் தூரதேசங்களில் உள்ள நம்முடைய விரோதிகளோ நண்பர்களோ கொஞ்சம் சத்தமாக மூச்சு விட்டால்கூட அது நமக்குத் தெளிவாகக் கேட்க வேண்டும் அதற்கு என்ன வழி?

1948 ஜூன் 7 ஆம் திகதி இஸ்ரேல் பிரதமர் டேவிட் பென்குரியன் தனது நம்பிக்கைக்குரிய அதிகாரிகள் சிலரை அழைத்தார். இன்றைய சூழ்நிலையில் இஸ்ரேலின் உளவு பலத்தை அதிகரிப்பது எப்படி? என்று ஆலோசனை நடத்தினார்.

பிரதமரே இப்படிக் கேட்கிறபோது அதிகாரிகள் சும்மா இருப்பார்களா? ஆளாளுக்கு யோசனைகளை அள்ளி வீசினார்கள் விவாதம் தூள் பறந்தது.

உளவுப்பணிகளுக்கு இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அதெல்லாம் வேண்டாம் நமது எதிரிகள் எல்லோரும் ஊருக்குள் தான் ஒளிஞ்சிருக்கிறார்கள். அவர்களைத் தோண்டி எடுத்து வெளியே கொண்டு வாறதுக்குப் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் தந்தாலே போதும்.

பொலிஸெல்லாம் அடிதடிக்குத்தான் லாயக்கு. ரகசியமா வேலை பார்க்கணும் என்றால் அதற்கு தனி உளவு நிறுவனம் இருக்க வேண்டும்.

உள்ளூரில உளவு பார்த்து என்னய்யா பிரயோஜனம்? நம்ம எல்லையைச் சுற்றிலும் விரோதிகள் முறைத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை நோட்டம் விடுவதற்கு யாராவது வேணுமா?

உளவாளிகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு அங்கிருக்கிறவர்களை நாம் வேலைக்குப் பயன்படுத்திக் கொள்வது ஒரு வழி செய்யணுமே. அது யாரோட பொறுப்பு? அதுக்குத் தேவையான பட்ஜெட்டை யார் ஒதுக்குவாங்க?

இப்படி ஒவ்வொருவரும் பேசப் பேச பிரதமர் டேவிட் பென்குரியனுக்குத் தலை சுற்றியது. அவருக்கு யாரை நம்புவது என்று புரியவில்லை. இஸ்ரேலின் உளவுத்துறை எப்படி அமைய வேண்டும் என்கிற ஆரம்பக் குழப்பம் இப்போது மேலும் சிக்கலாகிவிட்டது.

கடைசியாக பிரதமர் ஒரு முடிவுக்கு வந்தார். இவர்கள் சொல்றது எல்லாமே சரியாகத் தான் தோன்றுகிறது. அதன் படி பார்த்தால் இஸ்ரேலுக்கு ஒரே ஒரு உளவுத்துறை போதாது நாலைந்து உளவு நிறுவனங்களைத் தொடங்க வேண்டும். எல்லோருக்கும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் வேற வழியே இல்லை.

அன்று இரவு டேவிட் பென்குரியன் தன்னுடைய டைரியில் எழுதினார் இஸ்ரேல் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மொத்தம் மூன்று உளவு நிறுவனங்களைத் தொடங்க முடிவெடுத்திருக்கிறோம்.

முதலில் இராணுவத்தின் உளவுப் பிரிவு இதன் தலைவர்களாக ஐஸர் பீரி விவியன் ஹைம் ஹெர்ட்ஸோக் இருவரும் பணியாற்றுவார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய்...

சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவேளை பின்னால் முச்சக்கர வண்டியில் வந்த மூவர் அவரைக் கீழே தள்ளி விழுத்தி விட்டு வாள்வெட்டினை மேற்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்நிலையில் வீதியில் சென்றவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

ஊரெழுப் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## நாமலுக்கு...

நாமல் ராஜபக்ஷ நேற்று அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையானதை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை மாலைதீவிலிருந்து வந்த பிறகு, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி, ஒரு மனுவைச் சமர்ப்பித்ததாகக் கூறப்படுகிறது.

நாமல் ராஜபக்ஷ திட்டமிடப்பட்ட விசாரணைக்கு முன்னிலையாகத் தவறியதையடுத்து, அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணையைப் பிறப்பித்தது. (ம-7)

## மேல் நீதிமன்றில்...

இறுதி முடிவுக்கு எதிராக நேற்று முன்தினம் (28) திங்கட்கிழமை வடமாகாண மேல் நீதிமன்றில் எழுத்தாணை விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த எழுத்தாணை விண்ணப்பம் தொடர்பில் நேற்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாசன் அவர்கள் முன்னிலையில் குறித்த விண்ணப்பம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற குழு இசை - பிரிவு இரண்டின் போட்டி முடிவுகள் போட்டி நிபந்தனைகளுக்கு மாறாக உள்ளதாகவும் எனவே குறித்த போட்டி முடிவுக்கு எதிரான இடைக்கால நிவாரணம் வழங்குதல் தொடர்பில் சட்டத்தரணி விக்னராஜா சவீந்திரன் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இதனைக் கருத்தில் எடுத்த வடமாகாண மேல் நீதிமன்றம் இன்று 30ஆம் திகதி கட்டளையிடவுள்ளது.

இதேவேளை குறித்த போட்டியில் பங்குபற்றி பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது வடமாகாணத்தில் தமிழ்த் தினப் போட்டி முடிவு தொடர்பில் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது மனுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## 7 மனித...

டத்தின் 24ஆவது நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 07 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 03 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 03 எலும்புக்கூட்டுத் தொகுதியுடனுமாக 99 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையில் 111 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,33)

## நல்லிணக்கம்...

துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த [illegible]

அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை முன்னெடுத்து இருப்பதாகத் தோன்றவில்லை.

ஆனால் தமிழ் மக்களுடைய தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் எங்களுக்கான நீண்ட அரசியல் கொள்கைகளை கொண்ட சமஷ்டி அடிப்படையிலான அரசியல்தீர்வு என்பது எங்களுக்குரியது. குறிப்பாக காணி பொலிஸ் மற்றும் நிதி அதிகாரங்களைக் கொண்ட அதிகாரப் பகிர்வு வேண்டும்.

மேலும் தமிழ் மக்களே தங்களையே தாங்கள் ஆளக்கூடிய சுய ஆட்சி அமைய வேண்டும். அந்த வகையிலான ஆட்சி முறைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அரசாங்கத்தோடு நாட்டுக்குள் இந்த அழகு முறையைக் கொண்டு வருவதற்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இந்த அரசாங்கத்துக்குள் இன்னும் ஒரு ஆட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளக் கூடிய அல்லது இங்குள்ள இனங்களை ஒன்றிணைக்கின்ற எண்ணங்கள் இன்னும் உருவாகவில்லை எனத் தெரிவித்தார். (ம-7,316)

## செம்...

வுப் பணிகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (ம-7)

## தீவு...

இலங்கை அதன் வளமான கலாசார பாரம்பரியம், மாறுபட்ட நிலப் பரப்புகள் மற்றும் அழகிய கடற்கரைகள் ஆகியவற்றின் கலவைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தீவு தேசத்தின் தனித்துவமான வனவிலங்குகள், பழங்கால கோயில்கள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள் மற்றும் துடிப்பான உள்ளூர் அனுபவங்களுக்காக இந்தப் பட்டியலில் இலங்கை முதலிடத்தைத் தட்டிச் சென்றது. (ம-7)

## வவு...

எழிலரசி(வயது-53) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த வீட்டின் கீழ்த்தளத்தில் இருந்த பெண்ணே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் [illegible]

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 'ஸ்கான்' மூலம்...

செம்மணி மனிதப் புதைகுழியில் தோண்டும் இடமெல்லாம் மனித எச்சங்கள் காணப்படுகின்ற நிலையில் நேற்றுவரை 111 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை செம்மணி மனிதப் புதைகுழியில் ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சு இன்னும் அனுமதி தராத நிலையில், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானர் கருவியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஊடாகப் பெற்று அதனை செம்மணி அகழ்வுப் பணிக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி அகழ்வுப் பணி தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா இதனைத் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 5905
V 6 6 5 6 8 2
அத சம்பத
V 5 6 8 2
சீட்டிழுப்பு இலக்கம் 480
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 0921
துலாம் 05 08 27 51

தன நிதானய
திகதி - 2025.07.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1935
J 14 41 42 58 J
Double Chance 72813

மெகா பவர்
திகதி 29/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2253
H 09 01 02 22 72

ஜய
திகதி 2025.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 0173
P 7 8 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4147
சீட்டிழுப்பு திகதி 29.07.2025
Z 11 69 71 73
Z

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.29
சீட்டிழுப்பு இலக்கம் 1214
கன்னி 06 17 18 55 கன்னி
63816 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.07.2025 வெற்றி வாரம் 0613
D 1 5 1 2 5 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,845,865.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2879
சீட்டிழுப்பு திகதி 2025.07.29 தினம் செவ்வாய்க்கிழமை
05 17 30 67 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,864,720.00

சனிதா
திகதி 29.07.2025 வெற்றி வாரம் 5040
08 13 23 60 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00

சசிரி
வெற்றி வாரம் 736
சீட்டிழுப்பு திகதி 29.07.2025 செவ்வாய்க்கிழமை
23 25 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

சீட்டிழுப்பு வாரம் 4591
சீட்டிழுப்பு திகதி 29.07.2025 தினம் செவ்வாய்க்கிழமை
01 15 38 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,734,484.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 07 06 14 15 48
2055
29.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.584,960,128.80

அட கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2705
சீட்டிழுப்பு திகதி: 2025.07.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,748,555.20
20 21 41 53 I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துமீறி ...

மகோற்சவம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஆலய மகோற்சவ திருவிழாக்களை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24ஆம் திகதி வரையில் நல்லூர் ஆலய சுற்று வீதி வாகன போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டு மாற்று வீதிகள் ஊடாகவே வாகனங்கள் செல்ல பணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொடியேற்றத் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை ஆலய சுற்று வீதிகளில் உள்ள வீதித் தடைகளைத் தாண்டி இராணுவத்தினர் கப் ரக வாகனத்தில் ஆலய முன் வீதி வரையில் பிரவேசித்துள்ளனர்.

வீதித் தடைகளில் பொலிஸார் யாழ். மாநகர சபை உத்தியோகஸ்தர்கள், தனியார் பாதுகாப்பு சேவை உத்தியோகஸ்தர்கள் என்போர் கடமையில் இருக்கும் போது அவர்களின் அறிவுறுத்தல்களையும் மீறி இராணுவத்தினர் அடாத்தாக ஆலய வீதிக்குள் உட்பிரவேசித்தமை ஆலயத்தில் கூடியிருந்த பக்தர்களுக்கு இடையில் கடும் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது. (ம-7,104)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3525)

076 825 7716 (ஆகாஸ்)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3526)

**வணிகக்கல்வி கருத்தரங்கு**

ஆரம்பம் : 04.08.2025 திங்கள் 2.30p.m

DCM - யாழ்.நகர்

- சகல பாடத்திட்டங்களையும் உள்ளடக்கிய துரித மீட்டல்.
- பகுதி I, II இற்கான தயார்ப்படுத்தல்.
- வெளிமாணவர்களும் பங்குபெற முடியும்.

N.S.KAPIL
BBM (Hons) Spl in Marketing

077 778 9815/077 278 8489 (C-3527)

**வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| Stock Maintainance & Accounting | :0779098450 |
| வீட்டுப்பணிப்பெண்(வவுனியா) | :0788838395 |
| Sales Representative | :0779994847 |
| House Keeper | :0706053194 |
| Accountant | :0756420131 |
| Business Manager | :0753130101 |
| Debit Collector | :0742014818 |
| தொழிலநுட்ப உத்தியோகத்தர்(Civil/QS) | :0777120945 |
| Cashier (காசாளர்) | :0776953242 |
| Restaurant House Keeper | :0775527937 |
| Regional Agency Manager | :072019313 |
| Team Leader | :0776013738 |
| பெண் உதவியாளர்கள் | :0766397826 |
| Sales Manager(Basic 90,000) | :0779969661 |

(4932)

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

வேலையாட்கள் தேவையா : 074 138 3368

DEWMAS, 51, Amman Road, Nallur

**உணவக வேலைவாய்ப்பு**

யாழ்.சங்கானையில் உள்ள அசைவ உணவகம் (Restaurant) ஒன்றுக்கு கீழ்க் கண்டவர்கள் தேவை.

- கொத்து மேக்கர்கள்
- இந்திய மற்றும் சைனீஸ் உணவு தயாரிப்பவர்கள் (பிரைட் ரைஸ், நாசிக்குறா,மொங்கோலியன் ரைஸ், நூடில்ஸ்)
- அப்பம் தயாரிப்பவர், யூஸ் மேக்கர், BBQ தயாரிப்பவர்
- சமையலறை உதவியாளர், வெயிட்டர், சமையலறை சுத்திகரிப்பாளர்
- சமையல்காரர்கள்

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
உணவு, தங்குமிடம் வழங்கப்படும் (1385)

077 637 3210
077 459 8329
077 671 7990

**பதவி வெற்றிடங்கள்**

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையின் முதியோர் இயல்பு வாழ்வு இல்லத்திற்கு பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மேற்பார்வையாளர் 02
2. முதியோர் பராமரிப்பாளர் 03
3. சுத்திகரிப்பாளர் 02

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரத்தினை tellicoophospital@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவும் 076 771 1417 என்ற whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 05.08.2025 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு :
077 636 7378/ 077 238 0196

தலைவர்
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை
தெல்லிப்பளை (C-3528)

**யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு**

**இந்தியன் செலக்ஷனின்**

ஆடி மாத அதிரடித் தள்ளுபடி

இன்று முதல் ஆகஸ்ட் 05ஆம் திகதி வரை

| | | |
|---|---|---|
| சாறி | ~~2000/~~= | 1000/= |
| சாறி | ~~2500/~~= | 1500/= |
| சாறி | ~~5000/~~= | 3500/= |
| டொப் | ~~2500/~~= | 1000/= |
| டொப் | ~~3000/~~= | 1500/= |
| டொப் | ~~2500/~~= | 1500/= |
| சல்வார் துணி | ~~1800/~~= | 1400/= |
| லெஹங்கா | ~~11000/~~= | 6000/= |
| லெஹங்கா | ~~12000/~~= | 7000/= |
| லெஹங்கா | ~~12500/~~= | 8000/= |
| லெஹங்கா | ~~20000/~~= | 10000/= |
| சல்வார் | ~~10000/~~= | 5000/= |
| சல்வார் | ~~16000/~~= | 9000/= |



கல்யாணி கொட்டன் சாறி 3000/= மட்டுமே

மற்றும் தாராளமான ஆடைத் தெரிவுகள்

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம் : இன்று 30.07.2025 முதல் 05.08.2025 வரை
(வாரத்தில் 07 நாட்களிலும் வியாபாரம் நடைபெறும்) (1384)

**கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை**

| | |
|---|---|
| 5-9 Kg | 3950/- |
| 11-16 Kg | 2650/- |
| 21-27 Kg | 2470/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3526)

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2145/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

**சிறுநீரகம் தேவை**

15 வயது சிறுவனுக்கு (0+) சிறுநீரகம் மாற்ற வேண்டியுள்ளது சிறுநீரகம் தந்து உதவுபவர்கள் இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (4529)
077 070 0286

**பணியாளர் தேவை**

சாவகச்சேரியில் உள்ள யாட் (கட்டடப்பொருள் விற்பனை நிலையம்) ஒன்றிற்கு கீழ்வரும் வேலைகளுக்குரிய பணியாளர்கள் தேவை.

- மெசின் கல்லு அடிப்பவர்
- ரக்ரரில் பொருள் ஏற்றி இறக்குபவர்
- ரக்ரர் (உழவு இயந்திரம்) றைவர்


(1383)

தொடர்பு : 077 940 0963


**கண்ணீர் அஞ்சலி**

எமது யா/வேலாயுதம் மகா வித்தியாலய 95 A/L வர்த்தகப் பிரிவு நண்பரான

அமரர் சச்சிதானந்தம் சூரியப்பெருமான்
(பிரபல வர்த்தகர்)



அவர்கள் 26.07.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்:--07.02.1974
மறைவு:--26.07.2025

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்:--
95 A/L வர்த்தகப்பிரிவு வேலாயுதம் மகா வித்தியாலய நண்பர்கள்
95 A/L வர்த்தகப்பிரிவு நண்பர்கள்
95 [illegible] பூச்சி நண்பர்கள்
(C-3529)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org